OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED

S. M.
FERNANDO
580, HOSPITAL ROAD
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்

எஸ், எம்,
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 04 ஞாயிற்றுக்கிழமை (18 - 06 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 203

# புலிகளின் தொடர் தாக்குதல்களால்
# கிழக்கில் ராணுவ முகாம்கள் குறைப்பு!

## 2 மாதகாலத்தில் 300க்கு மேற்பட்டோர் பலி

கொழும்பு, ஜூன் 18

கிழக்கில் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக நடத்திவரும் தாக்குதல்களை அடுத்து, காட்டுப் புறங்களை அண்டிய பகுதிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் பல மூடப்பட்டு வருகின்றன. விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு இலகுவில் இலக்காகக் கூடியவை எனக் கருதப்படும் படை முகாம்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட பாதுகாப்பு உயர்பீடம் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போர் இடைநிறுத்த உடன்பாடு முறிவடைந்த பின்னர் கடந்த இரு மாத காலத்தில் மட்டும் கிழக்கில் புலிகளின் தாக்குதல்களில் முந்நூறுக்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்துள்ளனர்.

கிழக்கில் கடந்த பல வாரங்களாக விடுதலைப் புலிகள் காட்டுப் பகுதிகளில் படையினர் மீது வெற்றிகரத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்,

இதனால் காட்டுப் புறங்களில் உள்ள முகாம்களின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எந்நேரமும் விடுதலைப் புலிகளின் பெரும் தாக்குதலை எதிர்நோக்கியுள்ள படைமுகாம்கள் பல வாபஸ் பெறப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்கான தரவைக்குளம் முகாமை படையினர் முற்றாகக் கைவிட்டு வெளியேறி விட்டனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தம்பதெனியவில் பார்ஸல் குண்டு வெடிப்பு!

தம்பதெனிய ஆசிரிய கலாசாலைக்குச் சமீபமாக உள்ள கடை ஒன்றில் கடந்த புதனன்று காலை பார்ஸல் ஒன்றில் இருந்த குண்டு வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார். கடை பலத்த சேதமடைந்தது.

கடையில் கணக்காளராக கடமையாற்றும் ஒருவரே இச்சம்பவத்தில் காயமடைந்தார்.

இனந்தெரியாத நபர் ஒருவர் பார்ஸல் ஒன்றை கடையில் கொடுத்து திரும்பி வந்து பெற்றுக்கொள்வதாகக் கூறிச் சென்றார் என்றும் —

அந்தப் பார்ஸலில் இருந்த குண்டே பின்னர் வெடித்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## திருகோணமலையில் 2 படையினர் பலி

திருகோணமலைக்குமேற்கே திரியாய் காட்டில் நேற்றுக் காலை விடுதலைப்புலிகளும் இராணுவத்தினரும் மோதிக் கொண்டதில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

சண்டை தொடர்ந்தும் நடைபெறுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்போர் இடைநிறுத்தம் கைவிடப்பட்ட பின்னர் இது வரை 342 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று வெரித்தாஸ் தெரிவித்தது. (இ-4)

## மோட்டார் சைக்கிளில் வந்த இரு தமிழ் இளைஞர் கைது

### கொட்டாஞ்சேனையில் சம்பவம்

கொழும்பு, ஜூன். 18

கொட்டாஞ்சேனை முத்துமாரி அம்மன் கோவிலுக்குமுன்பாக உள்ள சைவக்கடையில் வைத்து புதனன்று கைதுசெய்யப்பட்ட இருதமிழ் இளைஞர்கள் பற்றி தகவல் எதுவும் இல்லை என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

மோட்டார் சைக்கிளில் வந்த இந்த இரு இளைஞர்களும் அதை கடை முன்பாக நிறுத்திவிட்டு உள்ளே சென்ற வேளை பின்னால் ஜீப்ஒன்றில் வந்த இராணுவத்தினர் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று கைதுசெய்துகொண்டு சென்றுள்ளனர்.

இந்த இரு இளைஞர்களும் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிந்து கொள்ள அவர்களது உறவினர்கள் மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### திம்புலாகலை பகுதியில்

## பாடசாலைகளை விட்டு மாணவர் வெளியேற்றம்

பொலனறுவை மாவட்டம் திம்புலாகலை விகாரையின் பிரதமசங்கநாயக்கர் கொலை செய்யப்பட்டதை அடுத்து அப்பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் சுமார் 300 பேர் அங்கிருந்து வெளியேறிச் சென்று விட்டதாக கல்வித் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இம்மாத முற்பகுதியில் அப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் மாணவர் வரவு 70சதவீதமாக வீழ்ச்சி கண்டிருந்தது.

போதிய பாதுகாப்பு இல்லாததால் திம்புலாகலை சுற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் ஏற்கவே கிராமங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவ்வாறு வெளியேறிச் செல்லும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலையை விட்டு விலக்கி தம்முடன் அழைத்துச் செல்கின்றனர். (ஐ)

## ஒற்றையாட்சியின் இறுதிக்கட்டத்தை நாம் நெருங்கி வந்து விட்டோம்

### சிங்கள பத்திரிகை விமர்சகர் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 18

'ஒற்றையாட்சியின் இறுதிக் கட்டத்தை நாம் நெருங்கி விட்டோம்'.

இப்படி அற்றியன் விஜயமான என்ற சிங்களப் பத்திரிகை விமர்சகர் தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்,

பாதுகாப்புச் செலவுக்கு பெருந்தொகை பணம்ஒதுக்கப்படுவது நாட்டுக்கு நல்லதல்ல எனக்கூறும் அவர், விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் நாம் வெற்றியீட்டுவோம் என்பதற்கு எவ்வித சான்றும் இல்லையெனக் கூறியுள்ளார்.

எந்தவொரு படையினாலும் அழிக்க முடியாத நாட்டின் நிரந்தரப் படை ஒன்றின் தோற்றத்தை விடுதலைப் புலிகளின் வான் பிரிவு அடைவது உறுதி.

இன்றைய உண்மை நிலையை அறிந்து அதற்கு அமைய உண்மையான சமாதானத்துடன் முயற்சிகளை எடுக்க வேண்டிய சந்தர்ப்பம் நெருங்கிவிட்டது.

அப்படி இல்லையென்றால் 21ஆம் நூற்றாண்டிலும் இது தங்கள் தேசம் என்ற மாயையில் இருந்து சிங்கள மக்கள் விடுபட்டு முன்னேற மாட்டார்கள்.

இப்படி அற்றியன் விஜயமான தனது கட்டுரையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ-4)

## சூடாநாட்டுக்கான தபால்பொதிகள் கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றன

### கடற்படை - தபால் திணைக்களம் இழுபறி

கொழும்பு, ஜூன் 18

சூடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய சுமார் ஐந்நூறு பொதிகள் கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

தபால்பரிவர்த்தனை நிலையத்துக்கு வந்து தபால்களை பரிசோதிக்குமாறு கடற்படையினருக்கு தபால் திணைக்களம் விடுத்த வேண்டுகோளுக்கு இதுவரைபதில் எதுவும் கிடைக்கவில்லை என்று தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களாக தபால் பொதிகள் எதுவும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்படவில்லை என்றும் —

சுமார் ஐந்நூறு தபால் பொதிகளும்' பொதி செய்யப்படாத கடிதங்களும் பரிவர்த்தனை நிலையத்தில் தேங்கிக் கிடப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் தபால்களை ஆங்கு வேறு ஆணி வேறாகப் பிரித்துப் பார்க்க வேண்டும் என்று கடற்படையினர் கூறுகின்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானத்தைக் கண்டால் படையினர் அழித்துவிடுவார்களாம்

### ராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு,ஜூன் 18

விடுதலைப் புலிகளுக்கு சொந்தமானவை எனக் கூறப்படும் விமானம் எதையும் பாதுகாப்புப் படையினர் இதுவரை காணவில்லை. அவ்வாறு காண நேரிடின் அவற்றை உடனடியாக அழிப்பதில் இராணுவத்திற்கு எதுவித சிரமமும் இருக்காது.

இப்படி இராணுவப் பேச்சாளர் சரத்முனசிங்கா தெரிவித்துள்ளார்.

புலிகளிடம் விமானங்கள் இருப்பதாக சிலர் கூறுகின்றனர். அவை அங்குமிங்கும் பறந்து திரிவதாகவும் கூறுகின்றனர்.

ஆனால் வடபகுதியிலுள்ள பாதுகாப்புப் படையினர் எவரும் இதுவரை அவற்றைக் காணவில்லை. அவ்வாறு காண நேரிடின் அவற்றை அழிப்பது சிரமமான காரியமாக இராது எனவும் அவர் தெரிவித்துள்ளார். [இ]

## இலங்கை பிரச்சினையில் இந்தியா யுத்த ரீதியாக இறங்கக்கூடாது

### பட்டது போதும் என்கிறார் ஜே. என். டிக்ஸிற்

இலங்கை இனப்பிரச்சினையில், இந்தியா அரசியல் நடவடிக்கைகளை ஊக்குவிக்கலாமே அன்றி, மீண்டும் யுத்த ரீதியாக அதில் இறங்கி விடக்கூடாது! ஏற்கெனவே பட்டது போதும்;

இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் இவ்வாறு தெரிவித்தார்.

''இந்தியா ருடே'' மாத இதழில் வெளியாகி உள்ள கட்டுரை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக் கட்டுரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழரின் சுயாட்சிக் கோரிக்கையை ஏற்று, அதிகாரத்தை நியாயமாக பகிர்ந்தளிக்க இலங்கை அரசு தவறினால், இன மோதல் தொடரும் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

யாழ்ப்பாணமும், திருகோணமலையின் ...

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் சம்பளம் படையினருக்கு

கொழும்பு, ஜூன். 18

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது இந்தமாத சம்பளத்தை தேசிய பாதுகாப்பு நிதியத்துக்கு வழங்கியுள்ளார்.

இந்தநிதி பாதுகாப்பு படைகளின் சேமநல நடவடிக்கைகளுக்குப் ... பயன்படுத்தப்பட வேண்டுமென்று அவர் ... [இ-4]

## சமாதான முயற்சிக்கு ஜேர்மனி ஆதரவு

கொழும்பு, ஜூன். 18

இலங்கை அரசாங்கம் சமாதான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று ஜேர்மனி வலியுறுத்தியிருக்கிறது.

ஜேர்மன் வெளிநாட்டு அமைச்சர், இலங்கைவெளிநாட்டு அமைச்சர்லக்ஷ்மன் கதிர்காமரை சந்தித்தபோது, உள்நாட்டு அரசியல் மோத

[4ஆம் பக்கம் பார்க்க]

## ராணுவம் உடைத்துத் திறந்த கடைகளில் பொருள் திருட்டு

அச்சுவேலி, ஜூன் 18

அச்சுவேலிப் பகுதிக்கு இராணுவம் வந்து திரும்பிச் சென்றபின்பு வர்த்தக நிலையங்களிலிருந்து பொருள்கள் களவாடப்பட்டதாக கூறப்படுகின்றது.

இராணுவம் உடைத்து திறந்துவிட்டு சென்ற சில வர்த்தக நிலையங்களில் உணவுப் பொருள்கள் களவாடப்பட்டிருப்பதுடன் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள், நிலுவைக் கணக்கு பதிவுப் புத்தகங்கள் முதலியனவும் களவாடப் பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (இ-11)

### அச்சுவேலியில் மேற்கொள்ளப்பட்ட

## படை நடவடிக்கைக்கு தமிழ் குழுக்கள் உதவி?

கொழும்பு, ஜூன் 18

அச்சுவேலிப் பகுதியில் நேற்று முன்தினம் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின்போது படையினருக்கு தமிழ் குழுக்களைச் சேர்ந்தவர்கள் சிலர் உதவியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

அச்சுவேலிப் பகுதியில் படையினர் நடமாடிய இடங்களில் சில தமிழ் குழுக்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினர் நடமாடிய இடங்களில் ரெலோ, ஈ. பி. டி. பி. ஈ என். டி. எல். எவ் ஆகிய குழுக்களின் பெயர்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளன. (ஐ-11)

## தேவாலயம், பாடசாலை அச்சுவேலியில் சேதம்

அச்சுவேலி, ஜூன் 18

அச்சுவேலி பகுதியை நோக்கி நேற்று முன்தினம் படையினர் மேற் கொண்ட நடவடிக்கையின் போது அங்குள்ள தென்னிந்திய திருச்சபை தேவாலயம், அச்சுவேலி மகாவித்தியாலயம் என்பனவும் தாக்குதலுக்கு இலக்காகிச் சேதமடைந்துள்ளன.

தென்னிந்திய திருச்சபைத் தேவாலயத்தில் படையினர் தமது எஞ்சிய உணவுப் பொருள்களை கைவிட்டுச் சென்றுள்ளனர்.

அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் தளபாடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் வீடுகள் பலவும் சேதமடைந்துள்ளன. வீடுகள், கடைகளில் இருந்த பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

இராணுவத்தினர் தங்கிச் சென்ற இடங்கள் சுடுகாடு போலக் காட்சி அளித்தன. (ஐ-17)

### சீருடையுடன் நடமாடவேண்டாம்

## திருமலையில் மாணவருக்கு பொலீஸார் எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன் 18

பாடசாலை நேரத்தில் சீருடையுடன் வீதிகளில் நடமாடக் கூடாது என்று திருமலை நகரில் மாணவர்களை பொலீசார் எச்சரித்துள்ளனர்.

பாடசாலை வேளையில் சீருடையுடன் வீதிகளில் நடமாடிய மாணவர்கள் பலர் கடந்த புதனன்று கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

இதேவேளை -

கடந்த புதனன்று பிற்பகல் திருமலை மத்திய வீதியில் வைத்து கைது செய்யப்பட்ட வேளை இளைஞர் ஒருவர் ''சயனைட்'' அருந்தியுள்ளார். இவர் தற்போது திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முன்னேற முயன்ற ராணுவ அணி மீது மட்டக்களப்பில் புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 18

மட்டக்களப்பு, தாண்டியடியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி இராணுவத்தினருக்கு பலத்த இழப்புகளை ஏற்படுத்தினார்கள்.

சென்ற வியாழக்கிழமை இத்தாக்குதல் நடைபெற்றது.

அன்றைய தினம் பகல் 11.15 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமில் இருந்து மணற்பிட்டி, அம்பிளாந்துறை, தாண்டியடி, தெய்வாமுனை ஆகிய பகுதிகளை நோக்கி பாரிய இராணுவ அணியொன்று முன்னேற்ற நடவடிக்கையில் ஈடுபட்டது.

இந்த அணியே தாண்டியடியில் வைத்து விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 3 போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 18

மட்டக்களப்பு தாண்டியடியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின்போது மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

கப்டன் ஜீவன் அல்லது வன்னுவநாதன் (கிருஸ்ணபிள்ளை ஜீவராசா - மட்டக்களப்பு)

2 ஆம் லெப்டினன் அமலன் அல்லது செந்தாமரை (தம்பிப்பிள்ளை நவேந்திரகுமாரன் - மட்டக்களப்பு)

2 ஆம் லெப்டினன் லோகேஸ் அல்லது லோகானந்தம் (கணபதிப்பிள்ளை சிறிதரன் - அம்பாறை) ஆகியோரே வீரச்சாவடைந்தவர்கள் ஆவர். (இ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லின 40 நாட்கள் நிரம்பிய அல்சேஷன் நாய் குட்டிகள் விற்பனைக்குண்டு. இல: 698/15 சபாபதி வீதி, தலையாழி வைரவர் கோயிலடி, யாழ்ப்பாணம் (37126)

முட்டையிட்டுக் கழித்த கோழிகள் விற்பனைக்குண்டு. தொகையாகவும் பெற்றுக் கொள்ளலாம். 698/15, சபாபதி வீதி, தலையாழி வைரவர் கோயிலடி, யாழ்ப்பாணம். (37125)

பால் எடுக்கக்கூடிய நல்ல இன ஜமுனாபாறி ஆடுகள் பெரிய கடாக்குட்டிகளுடன் விற்பனைக்குண்டு. இல. 68, கலட்டி அம்மன் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (8590)

Purebred Pomerenian நாய்க்குட்டிகளும், நல்ல இன Dashound பெண் நாயும் விற்பனைக்கு உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [37118]

## வீடு விற்பனைக்கு

இருபாலை கிழக்கில் சந்தியிலிருந்து 150 மீற்றர் தொலைவில் சகல வசதிகளுடன் புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 971, மே/பா உதயன். (8592)

## இறைச்சிக் கோழி

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப்பலகையுண்டு. [37094]

## (O/L) MATHS

(O/L)இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் முன்னோடிப் பரீட்சைக்கும், மார்கழிப் பரீட்சைக்குமாக 28 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறு பேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [8586]

## O/L கணிதம் -95

விசேடமாக Distinction, Credid பெறு பேறடைய வினா - விடை மூலம் ஆரம்பத்திலிருந்து B.Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோயிலடி (சிவன் கோயில் மேற்கு வீதி,) திருநெல்வேலி (37102)

## பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L வகுப்புகளுக்காக ஒவ்வொரு மாதமும் பயிற்சி வினாத்தாள்கள் [விடைகளுடன்] எம்மால் வெளியிடப்படுகின்றன. மே மாதத்திற்கான பயிற்சி வினாத்தாள்கள் 27-5-95 சனி முதல் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8557]

## மணமக்கள் தேவையா?

தொழில் வாய்ப்புப்பெற்ற, அல்லாத மணமக்கள், தாரம் இழந்தோர் சைவ போசன மக்கள், விதவைகள் எல்லாரகத்திலும் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம். (37111)

## மணமகள் தேவை

நட்சத்திரம் உத்திராடம் செவ்வாய் குற்றமுள்ள 31 வயது இத்தாலியில் தொழில் புரியும் மணமனுக்கு அழகான பெண் தேவை தொடர்பு புஸ்பா திருமண சேவை, 559-341 K. K. S வீதி, மனோகரா சந்தி அருகில் (37123)

செவ்வாய் 1, உத்தரம் 1, 32 வயது, லண்டனில் நிரந்தர விஸாவுடன் Computer Network Engineerஆக பணி புரிபவருக்கு நற்குணமுள்ள, படித்த, அழகான, சாதாரண உடீரமுள்ள, 27 வயதிற்கு உட்பட்ட மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் செய்து விஸாவுடன் லண்டனுக்கு அழைக்கப்படும். முழுவிவரத்துடன் விண்ணப்பிக்கவும். இல. 804, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [37093]

## சோதிடம்

வெளியூர் ஜெனன ஜாதகக் குறிப்பு உடன் எழுதிக் கொள்ள மற்றும் ஜாதகக் குறிப்பு பலன் பார்க்க ஸ்ரீமானை விநாயகர் சோதிட நிலையம், இல. 158, கோவில் வீதி, நல்லூர். [37115]

## வீடு தேவை

மூன்று பேரடங்கிய குடும்பத்துக்கு சகல வசதிகளுடன் கூடிய சிறிய வீடு/Annexe வாடகைக்குத் தேவை. நல்லூர் / பரியோவான் கல்லூரிக்கு அண்மையில் விரும்பத்தக்கது. தொடர்பு: இல. 802, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [37062]

## புலமைப்பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான இலங்கை பரீட்சைத் திணைக்கள மாதிரி வினாக்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட முன்னோடிப் பயிற்சி. ஆக்கம். பொன். சக்திவேல், Bright இன் கல்வி வெளியீடு. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-1493)

## தேவை

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட துணிப் பதிப்பகத்திற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: அந்திவானம் பதிப்பகம், நாவலர் சாலை [ஐந்துசந்தி], யாழ்ப்பாணம். [37120]

## கரும்புலிகள்தின போட்டிகளுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 18

ஜூலை மாதம் 5ஆம் திகதி இடம்பெறும் கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு மாணவர் அறிவியல் கழகம், ஆண்டு 10 பாடசாலை மாணவர்களிடையே அறிவியல்— விஞ்ஞான— செய்முறைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

போட்டிகள் இம் மாத நடுப்பகுதியில் நடத்தப்படும்.

இது தொடர்பான விவரங்கள் கிடைக்கப்பெறாத பாடசாலைகள், மாணவர் அறிவியல் கழகத்துடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். [ஓ-14]

## பரீட்சை அனுமதி அட்டை

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இயங்கும் தொலைக்கல்வி நிலையத்தைச் சேர்ந்த சகல ஆசிரிய மாணவர்களும் பரீட்சை அனுமதி அட்டைகளை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு நிலையத்தில் பெற்றுக் கொள்ளுமாறு சிரேஷ்ட போதனாசிரியர் அறிவிக்கின்றார். (ச)

---

1995/96 காலபோக
விதை உருளைக்கிழங்கு
பெறுவதற்கான
# விண்ணப்பம்

1995 / 96 காலபோகத்தில் இறக்குமதி செய்ப்படவுள்ள விதை உருளைக்கிழங்கு சென்ற ஆண்டைவிட அரை மடங்காக குறைக்கப்படவுள்ளதால் கிழங்கு பயிரிட உள்ள விவசாயிகள் தமக்கு தேவையான விதை உருளைகிழங்கினை பெற்றுகொள்வதற்கு இலகுவாக அதற்குரிய விண்ணப்பப் படிவங்களை தங்கள் உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள பசுமை வேளாண் சேவை நிலையங்களில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 15 - 07 - 1995 இற்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மத்திய வேளாண் நலச்சேவைகள்
விவசாயப் பகுதி,
த. பொ. மே. நிறுவனம்,
தமிழீழம்.

குறிப்பு:

உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளின் நலன் கருதி தனிப்பட்ட முறையில் வடபகுதிக்கு வெளியில் இருந்து விதை உருளைக்கிழங்கு கொண்டு வரப்பட்டு நடுகை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறும் விவசாயிகள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். [சி-1509]

---

சண்டிலிப்பாய், வேவிற்பதி
ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார்
தேவஸ்தானம்

# வருடாந்த மஹோற்சவம்

கொடியேற்றம் — 18 — 06 — 1995 ஞாயிறு காலை 10 மணி
இரதோற்சவம் — 26 — 06 — 1995 திங்கள் காலை 9 மணி
தீர்த்தோற்சவம் — 27 — 06 — 1995 செவ்வாய் காலை 9 மணி
28 — 06 — 1995 புதன் பகல் சங்காபிசேகம் இரவு திருக்கல்யாணம்
29 — 06 — 1995 வியாழன் மாலை — மாதாந்த மூன்றாம் பிறை சந்திர தரிசன உற்சவம்



தொடர் விரிவுரை
தினசரி இரவு 8மணி

கம்பவாருதி
இ. ஜெயராஜ்
'மஹா
பாரதம்'

— பரிபாலனசபை

(37127)

---

# வீடு வாடகைக்கு தேவை

வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம், பிரதம பொறியியலாளர் காரியாலயம் இயங்குவதற்கு ஏற்ற வசதிகளுடன் ஒரு வீடு தேவையாக உள்ளது. 2,000 சதுர அடி பரப்பளவுக்கு குறையாமலும், யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து ½ மைல் சுற்று வட்டத்தில் இருத்தல் விரும்பத்தக்கது. வீடு வாடகைக்கு கொடுக்க விரும்புபவர்கள் வாடகை மற்றும் மேலதிக விவரங்களுக்கு;

பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
இல: 205, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரியில் 01 - 07 - 95 ற்கு முன்பு தொடர்பு கொள்ளவும்.

பிரதம பொறியியலாளர்,
வீ. அ. அ. சபை,
யாழ்ப்பாணம்.

[சி-1450]

---

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



இதயத்தின் ஒளியாக:
14 - 12 - 1957

இதயத்தில் இடியாக:
18 - 06 - 1992

செல்வி
## சௌபாக்கியவதி நவரத்தினராசா
(ஆசிரியை, யா/வட. இந்து மகளிர் கல்லூரி)

பெற்ற மகள் பிரிவுதனை பொறுக்க முடியாத அன்னையிவள், நித்தமும் உங்களை நினைந்து கலங்குகிறார். சிரித்த உங்கள் முகம் காண துடிக்கிறார். மூன்றாண்டு சென்றிடினும், மாறாது உங்கள் பாசமும் நினைவும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
ஐயா, அம்மா, அண்ணன்மார்,
அண்ணிமார், மருமக்கள்,
உறவினர்கள்

எஸ். நவரத்தினராசா,
கணேசன் தோட்டம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(37100)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 29 — 10 — 1929
இறப்பு: 19 — 05 — 1995

அமரர்
## கணபதிப்பிள்ளை கமலாம்பிகை

நாடு விட்டு நாடுவர நல்வாழ்த்து தந்தவளே!
பாடுபட்டு பெற்றவளே பாலூட்டி வளர்த்தவளே!
கூடு விட்டு உயிர் போக கொல்லுவிதி வந்ததுமே!
நாடுவிட்டாய் நம்மைவிட்டாய் நான் என்ன—
செய்வேன் அம்மா

மகன் - கௌரிதாஸ்.

அரியாலை, யாழ்ப்பாணம். [8593]

---

# நினைவஞ்சலி





சிவதொண்டன்
அமரர்
## கதிரிப்பிள்ளை சோமசுந்தரம்
(முன்னாள் பிரபல வர்த்தகர்,
சாண்டோ பயில்வான்[சோமு]

தோற்றம்: 30—11—1905
மறைவு: 27— 05— 1993

திருமதி
## பரமநாயகம் சோமசுந்தரம்

தோற்றம்: 05 — 01 — 1913
மறைவு: 29 — 06 — 1994

திதி: 18 — 06 — 1995

ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் என்றும்
உங்கள் நினைவுகளோடு வாழும் அன்பு நெஞ்சங்கள்;

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

ஆலடி சந்தி,
வல்வெட்டித்துறை.

[சி-1514]

---

# நன்றியுடன் நினைவு கூருகின்றோம்



மலர்வு: 18 — 06 — 1918
உதிர்வு: 09 — 04 — 1990

அமரர்
## உவில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா
(இளைப்பாறிய அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

"நான் கர்த்தருடைய வீட்டில்
நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்"
சங். 23. 6

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி, மைத்துனர்.

யாழ்ப்பாணம் வீதி,
மானிப்பாய்.

[8595]

---

# நீங்கா நினைவஞ்சலி



பிறப்பு: 01 — 05 — 1946
மறிப்பு: 17 — 06 — 1985

## ப. சாந்தாராமன் (சாந்தா)
(அம்பிகா, கன்னாதிட்டி)

— குடும்பத்தினர், நண்பர்கள்.

தகவல்:
து. பஞ்சரெத்தினகோபால்,
12/42, (6/12A), கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [37128]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பொருத்தமில்லா முடிவு இது

ஜேர்மனியில் உள்ள ஈழத் தமிழர்கள் 45,000 பேரை திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று— கொழும்பு வந்துள்ள ஜேர்மன் அரசுப் பிரதிநிதிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

தங்கள் நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள ஈழத் தமிழர்களுக்கு அவ்வாறு தஞ்சமளிக்கத் தேவையில்லை என்று கருதியதாலேயே அவர்களைச் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாக அவர்கள் விவரித்துள்ளனர்.

சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வந்த புதிதில் ஏதோ ஒரு சில மாதங்களில் சமாதானத்தை உருவாக்கி விட முடியும் என்று கற்பனை செய்து, பெரும் பிரசாரம் செய்தது. செயலில் வெறும் பூச்சியமாக இருந்து கொண்டு சொல்லில் வெளுத்து வாங்கியது.

அந்தச் சொற்களைக் கேட்டு இவர் உண்மையான சமாதான விரும்பி தான்; அதனை எய்தும் ஆற்றல் உண்டுதான் என்று நம்பி இந்தியா அடி எடுத்துக் கொடுக்க, மேற்கு நாடுகளும் தமதகத்தே உள்ள ஈழத் தமிழர்களைத் திருப்பி அனுப்புவதற்கு முனைந்தன.

ஆனால் சந்திரிகா கூறியது போல சமாதானத்தை அவரால் காணமுடியவில்லை. தமக்கெனக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை தனது தவறான அணுகுமுறையால் அவர் நழுவவிட்டு விட்டார்.

அதன் பின்னர் இப்போது அவர் தமிழர்களுக்கு எதிராகப் போர் தொடுத்துள்ளார். போர் என்பது தமிழர் படுகொலை என்றுபொருள்படும்.

நிலைமை இப்படியிருக்க, தமது நாட்டில் அரசியல் தஞ்சம் கோரிய ஈழத் தமிழர்களை இப்போது திருப்பி அனுப்புவதாக ஜேர்மன் அரசுப் பிரதிநிதிகள் கூறுவது பொருத்தமற்றதாகும்.

புதிய ஜேர்மனி உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாகப் பிரகாசிக்க வேண்டும் என்பது அந்நாட்டுத் தலைவர்களின் புதிய சிந்தனையாக இருக்கிறது. அத்தகைய சிந்தனை உள்ளவர்கள் ஈழத் தமிழர்களை பலிக்களத்துக்கு அனுப்புவது போல திருப்பி அனுப்ப முனைவது புதிய சிந்தனைக்கு முரணானதாகும்; ஒவ்வாததுமாகும்.

நிர்க்கதிக்குள்ளாகும் மக்களுக்குத் தஞ்சம் கொடுப்பது மனித நேயச் செயலாகும். உலக அரங்கில் நல்ல பெயர் எடுக்க முயன்று வரும் ஜேர்மனி தனது மனித நேயச் சேவையை நிறுத்த முயற்சிப்பது எந்த வகையிலும் அதற்கு உதவப்போவதில்லை.

ஜேர்மனி இது விடயத்தில் ஏனைய நாடுகளுக்கு தவறான வழியைக் காட்ட முயல்வது கண்டிக்கப்பட வேண்டியதாகும். ஆசிய நாடுகளுடன் தனது நட்பையும், வர்த்தகத்தையும் பலப்படுத்த விரும்பும் ஜேர்மனி, அந்நாடுகளின் அரசாங்கத் தலைவர்களின் ஆதரவை மட்டும் பெற முயல்வது உகந்த அணுகுமுறையல்ல.

ஜேர்மனியில் உள்ள ஈழத் தமிழர்கள் தமக்கு விடுதலை கிடைத்ததும் தாயகம் திரும்புவார்கள் என்ற நம்பிக்கை ஜேர்மன் தலைவர்களுக்கு உண்டு என்று முன்னர் தெரிவிக்கப்பட்டது.

அத்தகைய ஜேர்மனி அரசு திடீரென ஈழத்தமிழர்களைத் திருப்பி அனுப்புவது என்ற முடிவுக்கு வந்திருப்பது — போர் நடந்து கொண்டிருக்கும் வேளை திருப்பி அனுப்ப முனைவது — ஆச்சரியத்தைத் தருகிறது.

புதிய ஜேர்மனி எதிர்நோக்கும் தனது சொந்த வளர்ச்சிக்கான பணிகளின் மத்தியில் அகதிகள் பாரமானவர்களாகத் தென்படலாம். எனினும் இவ்வேளையில் ஈழத் தமிழர்களைத் திருப்பி அனுப்புவதனால் இதுவரை அவர்களுக்கு வழங்கிய ஆதரவு அர்த்தமற்றதாகிவிடும்— பயனற்றதாகி விடும் — என்பதனை உன்னிப்பாகச் சிந்திக்க வேண்டும்.

ஜேர்மன் இது விடயத்தை மனித நேயத்துடனும், அனுதாபத்துடனும், நோக்கி தமது முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டும்.

# இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வு போலவே
# அரசமைப்பு மாற்றமும் கிணற்றில் போட்ட கல்!

இலங்கை வாழ் தமிழ் மக்கள் எங்களது அரசாங்கத்தை — எம்மை — அடக்குமுறையாளர்களாகப் பார்க்கவில்லை. இதனைத் தங்களுக்கு மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறோம்—

கடந்த வாரம் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்துப் பேசிய போது நீதி மற்றும் அரசமைப்புத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் வடக்கு - கிழக்கில் தொடங்கியுள்ள போர், தமிழ் மக்களுக்கு எதிரானது

### வார்த்தை வண்ணம் போட்டு உலக நாடுகளைக் கவர முயற்சி

அல்ல; அவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவதற்கு அல்ல. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரே வடக்கு - கிழக்கில் தொடங்கப்பட்டுள்ளது. அது அவர்களின் பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கான போரே — என்ற கருத்தை வெளிநாடுகளிடம் விதைப்பதே இத்தகைய ''பச்சை''ப் பொய்களின் நோக்கம்.

தமிழர் தாயகத்தில் போரை நடத்துவதற்காக, அரசாங்கத்துக்கு வெளிநாடுகளின் இராணுவ உதவி இப்போது மிக அவசரமாகத் தேவைப்படுகிறது. உலக நாடுகளிடம் அத்தகைய உதவியை வழங்குமாறு ஸ்ரீலங்கா அரசாங்கம் கேட்டிருக்கிறது. ஆனால் பல நாடுகளிடம் அது சம்பந்தமாக ஆக்கபூர்வமான பதில் கிடைக்கவில்லை.

எனவே தமிழர் தாயகத்தில் தாம் நடத்தும் போர், நாட்டுப் பிரிவினை கோரும் பயங்கரவாதத்துக்கு எதிரானது; வடக்கு - கிழக்குக்கு அப்பாலும் நாட்டிலும் ஏனைய பகுதிகளிலும் உயிர், உடைமைகளை அழித்து வரும் ஒரு கெரில்லாக் குழுவுக்கு எதிரானது என்று வெளிநாடுகளை நம்ப வைக்க அரசு பெருமுயற்சி எடுத்து வருகிறது.

இந்தப் போர் தமிழருக்கு எதிரான போர் அல்ல; அவர்களுக்கு உரிமையை வழங்குவதற்காக நடத்தப்படும் போர் என்ற பொய்யை வெளிநாடுகளை நம்பச் செய்யும் பொறுப்பை அமைச்சர்கள் ஜி எல். பீரிஸ், லக்ஷ்மன் கதிர்காமர் ஆகிய தமது நம்பிக்கைக்குரிய இருவரிடமும் ஒப்படைத்திருக்கிறார் சந்திரிகா.

### வெளி நாடுகளை மயக்கும் முயற்சி

அவர்கள் இருவரும் தங்கள் புத்திசாதுரியத்தைப் பயன்படுத்தி, வார்த்தை வண்ணம் போட்டு வெளிநாடுகளைத் தமது பக்கம் மயக்கி, கவர்ந்து இழுக்க முயல்கிறார்கள்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை அமுல் செய்வதற்குத் தேவையான சூழ்நிலை உருவாக்கப்படும் வரைக்கும் அரசாங்கம் போர்

அரசியல்

புரியும்—என்று அமைச்சர் பீரிஸ் கொழும்பில் வைத்து வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு கூறும் அதே வேளையில்—

அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வந்து சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தவே போர் நடத்தப்படுகிறது— என்று அமைச்சர் கதிர்காமர் வெளிநாடுகளுக்கு நேரில் சென்று பிரசாரம் செய்து வருகிறார்.

போரை நியாயப்படுத்தி வெளிநாடுகளிடம் இருந்து இராணுவ உதவி பெறுவதற்கு இயன்றளவு அதி தீவிரமாக உழைப்பதே இப்போது கதிர்காமருக்குச் சந்திரிகா வழங்கியுள்ள பணி ஒதுக்கீடு (Assignment).

அப்பட்டமான முழுப் பொய்களையே கூறி அவர் தமது பணியைத் திறம்படச் செய்து வருகிறார். கதிர்காமரை வெளிவிவகார அமைச்சராக நியமிக்கும்போதே தமிழருக்கு எதிரான இப்படி ஒரு பணியைச் செய்வதற்குப் பொருத்தமானவர் என்று நினைத்தே அந்த நியமனத்தைச் சந்திரிகா செய்திருக்க வேண்டும்!

மொத்தத்தில் அமைச்சர் பீரிஸும், கதிர்காமரும், தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்காகவே, சமாதானத்தைக் கொண்டு வருவதற்காகவே தமிழர் தாயகத்தில் போர் தொடுக்கப்பட்டுள்ளது என்ற முழுப் பொய்யை, வெளிநாடுகளை நம்பச் செய்வதற்கு பெரும்பாடுபடுகிறார்கள்.

### எதிர்ப் பிரசாரம் அவசரமானது

அரசின் இந்தப் பொய்ப் பிரசாரத்தை முறியடிக்க வேண்டிய முக்கியமானதும் அவசரமானதுமான பணி தமிழர்களுக்கும் உண்டு.

அந்த வகையில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் அந்தந்த நாடுகளில் நடத்தி வரும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் அரசின் பொய்ப் பிரசாரத்தை முறியடிக்க பெரிதும் உதவுகின்றன எனலாம்-

தங்களுடைய பொய்ப் பிரசாரத்தை இத்தகைய தமிழர் ஆர்ப்பாட்டங்கள் தவிடு பொடியாக்கிவிடும் என்ற அச்சம் அரசுக்கு எழுந்துள்ளது. கடந்த இரு வாரங்களில் கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், நோர்வே, சுவிஸ், டென்மார்க், அவுஸ்திரேலியா ஆகிய எட்டு நாடுகளில் அரசின் பொய்மையை உடைக்கும் விதத்தில் நடந்த கண்டனப் பேரணிகள் சந்திரிகா அரசாங்கத்தைத் திகிலடைய வைத்துள்ளன.

இனிமேல் என்ன செய்வதென்று தெரியாமல், வெளிநாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகள் அலுவலகங்களை மூடுமாறு சம்பந்தப்பட்ட நாடுகளிடம் ஸ்ரீலங்கா அரசாங்கம் கேட்க முனைந்துள்ளது. ஆனால் அந்தக் கோரிக்கையை பரிசீலிக்கத்

### இராணுவப் போருடன் சேர்த்து உளவியல் போருக்கும் ஏற்பாடு

தானும் மேலைநாடுகள் தயாரில்லை என்பது தெரிய வந்துள்ளது.

தத்தமது நாட்டு சட்டங்களை மீறாமல் இருக்கும் வரை விடுதலைப் புலிகளின் அலுவலங்களை மூடுவதோ அல்லது புலிகளுக்கு ஆதரவான நடவடிக்கைகளைத் தடுப்பதோ இயலாத காரியம் என்று சந்திரிகா அரசுக்குக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

### உளவியல போருக்கும் ஆயத்தம்

எப்படியிருந்த போதிலும்— வடக்கு - கிழக்கு வாழ், தமிழர்கள் நடத்துவது விடுதலைப் போராட்டம்! அவர்களது சகல வாழ்வுரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளன! அடிப்படை மனித உரிமைகள் ஸ்ரீலங்கா படைகளால் மிகப் பெரிய அளவில் மீறப்படுகின்றன! அரசாங்கத்தினால் அடக்குமுறைக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளனர்! இராணுவ ஆதிக்கத்தின் கோரத் தாண்டவம் அவர்களை அடிமைகளாக்கப் பார்க்கிறது! என்ற உண்மைகளை சர்வதேசத்துக்குச் சொல்வதற்கு காத்திரமாகச் செயற்படக்கூடிய கனதியான சர்வதேச பிரசார இயந்திரம் தமிழருக்குத் தேவை. புதிய பிரசார உத்திகளும் அவசியம்.

வெளிநாடுகளில் பொய்ப் பிரசாரத்தை நடத்தி வரும் ஸ்ரீலங்கா அரசு உள்நாட்டில் தமிழர் மனங்களை மாற்றுவதற்கான உளவியல் போரை பெரிய அளவில் நடத்தவும் திட்டமிட்டு வருவதாக அறியப்படுகிறது. முந்திய பிரேமதாசா, விஜேதுங்கா அரசுகளின் பதவிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அளவில் உளவியல் போர் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று அரசாங்க உயர் மட்டங்களுக்குச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

எனவே இராணுவப் போர் பெரிய அளவில் நடத்தப்படவுள்ளது போலவே, தமிழர்கள் மனங்களைத் தாக்கும் நோக்குடன் உளவியல் போர் என்ற ஏவுகணையையும் அரசு வேகமாகச் செலுத்தவுள்ளது. இவை குறித்துத் தமிழ் மக்கள் கவனமாக இருக்க வேண்டும்.

★ ★ ★

### புதிய அரசமைப்பு அசாத்தியம்

அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டு, சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவே போர் தொடங்கப்பட்டிருப்பதாக அரச தரப்பில் கூறப்படுகிறது. ஆனால் அரசாங்கத்திடம் தீர்வுத் திட்டமோ அதற்கான யோசனையோ தானும் இல்லை என்பதே உண்மை!

அரசின் தீர்வுத் திட்டம் இப்போதைக்கு வெளியிடப்பட மாட்டாது என்றும், தீர்வு யோசனை இப்போது தான் தயாரிக்கப்படுகிறது என்றும், அந்த யோசனை அரசமைப்புச் சம்பந்தமான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின்னரே அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்படும் என்றும், வாய்க்கு வந்ததை எல்லாம் அமைச்சர் பீரிஸ் நேரத்துக்கு நேரம் கூறிவருகிறார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் புதிய அரசமைப்புச் சட்டம், ஜனாதிபதி சந்திரிகா தேர்தலின் போது வாக்குறுதி அளித்த பிரகாரம், எதிர்வரும் (ஜூலை) 15ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைக்கு வர வேண்டும்.

ஆனால் புதிய அரசமைப்பின் நகல் அத்தியாயங்களில் நான்கு மட்டுமே இது வரை பகிரங்கமாக்கப்பட்டுள்ளன. இன்று 18ஆம் திகதி ஐந்தாவது அத்தியாயம் வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது!

### ஐ. தே. க. ஆதரிக்காது

இந்த ஆமை வேகத்தில், புதிய அரசமைப்பு இன்னும் ஒரு வருடம் கழிந்தாலும் உருவாக மாட்டாது. அதற்குள் அரசாங்கம் ஆட்டம் கண்டு கவிழ்ந்து போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. முன்னர் எதிர்பார்த்தது போல, கூறியது போல ஐக்கிய தேசியக்கட்சி உத்தேச புதிய அரசமைப்பை ஆதரிக்கப் போவதில்லை. மூன்றில் இரண்டு பெரும்பான்மை இன்றி புதிய அரசமைப்பை நிறைவேற்றவும் முடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஜே.வி.பியின் நிஹால் கலபதிக்கு —

1995 ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும் என்று சந்திரிகா உறுதியளித்ததும் —

கலபதி ஜனாதிபதி தேர்தலில் இருந்து நீங்கிக் கொண்டதும் —

அவரது ஜே. வி. பி. ஆதரவாளர்களான இளைஞர், யுவதிகள் சந்திரிகாவுக்கு வாக்குகளை அள்ளிப் போட்டதும் மறந்து போகும் காரியங்களல்ல.

இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனை ஒன்றை எழுத்தில் வடிக்காமலே, அதனை விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்துப் பேசப் போவதாகக் கூறியது போலவே —

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பும் ஆகிவிட்டது. இரண்டுமே கிணற்றில் போட்ட கற்களாகிவிடும் நிலையே இதுவாகும். இதன் தாக்கம் தெற்கில

- உதயகாந்தன் -

பெரும் பூதாகாரமாக வெடிக்கும். இளைஞர் கிளர்ச்சி என்று ஆரம்பத்தில் இல்லாவிடிலும், வேலை நிறுத்தங்கள், மறியல் போராட்டங்கள், வீதிப் போராட்டங்கள் என்று தொடங்கும்.

### திசை திருப்பும் பிரகடனம்!

அங்கு எழக் கூடிய எதிர்ப்பை அமுக்கித் திசை திருப்புவதற்காகவே, வடக்கின் மீதான பெரும் இராணுவத் தாக்குதல் ஜூலை மத்தியில் நடத்தப்படும் என்று சந்திரிகா ''பிரகடனப்படுத்தி'' உள்ளார்!

நிறைவேற்று ஜனாதிபதி முறையை உடனடியாக ஒழித்து விடுவதற்கு சந்திரிகா விரும்பவில்லை. தமிழர்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யாத தீர்வு ஒன்றைத் திணிப்பதற்கு இப்போது நடைமுறையில் உள்ள அதிகாரங்கள் அவருக்குத் தேவைப்படுகின்றன.

எனவே வடக்கின் மீதான போரை முடுக்கிவிட்டு சிங்கள இளைஞருக்கு இனத்துவேசத்தை ஊட்டி அவர்களைத் திசை திருப்பிவிட்டால், நிறைவேற்று ஜனாதிபதி விவகாரத்தை மறக்கச் செய்து விடலாம் என்பது சந்திரிகாவின் திட்டம்!

தமிழருக்கு எதிரான போரில் உதவுமாறு பிறரிடம் (வெளிநாடுகளிடம்) கையேந்தி நிற்கும் சந்திரிகாவினால் யுத்தத்தில் வெல்ல முடியுமா என்பது ஒருபுறமிருக்க, ஈழப்போர் போன்று நீண்டதாகவே இருக்கும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.


தமிழர் பிரச்சினைக்குத் தீர்வும் இல்லை; நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவும் மாட்டாது. போர் நீடிக்கும். அரசு ஆட்டம் காணும். சந்திரிகா சர்வாதிகாரியாவதற்கு முயல்வார். இலங்கையின் அரசியல் நாடகத்தில் இந்த காட்சியையே இனி அடுத்துக்காண நேரிடும். ★

# வியாழன் விருச்சிக இராசிக்குள் சஞ்சரிக்கும் நான்காவது 12 வருடச் சுழற்சிக்காலம் இது

## அரசுக்கே அதிக இழப்புகள் உண்டாகும்

முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினை என்பவற்றினதும், பிரபஞ்சமளாவிய பேரறிவு (Universal or Cosmic Intelligence) ஒன்றுதான் எல்லா பிரபஞ்ச நிகழ்வுகளையும் கட்டுப்படுத்தி ஆள்கிறது என்ற இந்த இரண்டு கூற்றுக்களினதும் அடிப்படையில் தான் சோதிட சாஸ்திரத்தை புரிந்து கொள்ள முடியும்.

பிரபஞ்சம் ஒரு ஒழுங்கமைப்பாக [System] இருப்பதால்




ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுள்ளது. இந்த ரீதியில் கிரகங்களும் கீழ் மட்டத்தில் நிகழ்வுகளை கட்டுப்படுத்துகின்றன. விஞ்ஞானத்தின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்று ''Every Action Has a Reaction-ஒவ்வொரு தாக்கத்திற்கும் மறுதாக்கமுண்டு'' இதையே 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்று வினைகளைப் பற்றி ஞானிகள் கூறுவர். இத்தகைய விடயங்களைச் சடப்பொருள் பற்றிய வாதத்தில் ஈடுபடும் விஞ்ஞானத்தினால் நிரூபிப்பது கடினம். இருப்பினும் விஞ்ஞான வழிமுறைகளை கூடியளவு பின்பற்றி எதிர்வு கூறினால் அவை அதிகபட்சம் சரியானவையாகவே இருக்கும்.

சோதிடம் என்பது பழமை பொருந்திய ஒரு புனிதமான துறை. அதன் அடிப்படை அலகுகளில் ஒன்று 'பிரபஞ்ச அறிவு' [Cosmic Intelligence] இதனால்தான் வழிபாடு முக்கியத்துவமுடையது ஆகிறது. நமது சிற்றறிவு ஒன்று சேர்ந்து வேண்டுதல் செய்தால் அது அந்த பேரறிவை விரைவாகவும் பலமாகவும் எட்டும். அதற்கு நிச்சயம் பதிலுண்டு.

12 வருட சுழற்சியில் வியாழன் விருச்சிக இராசிக்குள் பிரவேசித்திருந்த காலங்களில் கடந்த மூன்று தடவைகள் அடுத்தடுத்து அசம்பாவிதங்கள் நடந்தன. 1959 - 09 - 26 இல் அப்போதைய பிரதமர் S.W R.D பண்டாரநாயக்கா சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அடுத்து 1971 ஏப்பிரலில் சேகுவேரா கிளர்ச்சியாளர்கள் அரசுபடைகளுடன் பெரியளவில் போர் புரிந்தனர் தொடர்ந்து 1983 ஜூலையில் இனக்கலவரம் மூண்டது இந்தவரிசையில் [illegible] வியாழன் விருச்சிகஇராசியில் இருக்கும் [illegible] தகையதொரு நிகழ்வை எதிர்பார்க்க இடமுண்டு.

### தலைவர்களுக்கு ஆபத்து

இந்த வகையில் 1995 ஜூலை 11 ஆம் திகதி தொடங்கி 1995 ஓகஸ்ட் 28 வரை செவ்வாய், கன்னி ராசியிலும் வியாழன் விருச்சிக ராசியிலும் சனி, மீன ராசியிலும் சஞ்சரிக்கும் காலம் மிகவும் பதற்றமானதும் இழப்புக்களை உண்டு பண்ணக் கூடியதுமாகும். இக்காலத்தில் மீண்டுமொரு இனக்கலவரமோ கிளர்ச்சியோ அல்லது அரசியல் தலைவர்களுக்கு ஆபத்தோ ஏற்பட இடமுண்டு. தலைநகரில் குண்டுகள் வெடிக்கும். வியாழன் விருச்சிக இராசியில் இல்லாத ஏனைய காலங்களில் ஏற்பட்ட இம்மாதிரியான நிகழ்வுகளுக்கிடையே ஒற்றுமைகள் அதிகம் காணப்படுகின்றன.

இலங்கையின் இலக்கினம் கும்பம். விருச்சிக, கன்னி இராசிகள் இவற்றில் சம்பந்[illegible] தமிழர் தாயகத்தில் [illegible] ஏப்பிரல் 19இல் ஏற்பட்ட யுத்தமுறிப்பிலிருந்து பாதிப்புக்கள் தொடங்கிவிட்டன. ஆனால் மேற்குறிப்பிட்ட காலத்தில் இது உக்கிரமடைந்துவிடும். இக்காலகட்டத்தில் இருபக்கங்களிலும் இழப்புக்கள் ஏற்படும் இருப்பினும் அரசிற்கு பாரிய இழப்புக்களுண்டு. செப்ரெம்பரிலும் தொடரும். ஆளும் கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட இடமுண்டு. அரசிற்கும், வடக்கு- கிழக்கு பகுதிக்குமிடையேஉள்ள தொடர்புகள் விவாகரத்துக்குச் செல்லும் கணவன் மனைவிக்கு இடையே உள்ளது போன்று கசப்பானதாக இருக்கும். இரண்டும் கெட்டான் நிலை 2½ வருடங்களுக்கு சனி மீனத்தில் சஞ்சரிக்கும் வரை இருக்கும்.

### அரசுக்கு இழப்புகள்

அதாவது 1995 ஜூன் 1 ம் திகதி மீனத்திற்கு சென்ற சனி வக்கிரித்து ஓகஸ்ட் 12 இல் மீண்டும் கும்பத்திற்கு செல்லும். அதன் பிற்பாடு 1996 பெப்ரவரி 21 இல் திரும்பவும் மீனத்திற்கு செல்லும் பின்னர் 1998 ஏப்பிரல் 16 வரை அங்கிருக்கும்.

சனி அங்கிருக்கும் போது வடக்கு — கிழக்கில் வாந்திபேதி, செப்ரிசீமியா, மலேரியா, வயிறு குடற்புண், மனநோய், போசாக்கின்மை, கால், எலும்பு முறிதல், இளம்பிள்ளைவாதம் போன்றவை அதிகம் தாக்கும் இவற்றால் மரணவீதம் அதிகரிக்கும் ஆபத்து உண்டு உணவுப் பொருட்கள், மருந்துவகைகள் போன்றவற்றுக்கு தட்டுப்பாடிருக்கும் உளவாளிகள் நடமாட்டம் அதிகரிக்கும்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் பாட்டாளி வர்க்கம் அதிகம் கஷ்டப்படும்

சுழிபுரம்
கே. பி. சர்மா

பொதுவில் இழப்புக்கள் அதிகம் உண்டு.

1995 டிசம்பர் 9இல் ராகு கன்னிக்கு இடம் பெயர்ந்து 1997 ஜூன் 2 வரை அங்கிருப்பதும் தொடர்ந்தும் அரசபடைகளுடன் மோதல்கள் இடம் பெறும் அதனால் அரசிற்கு பலத்த இழப்புக்களை உண்டுபண்ணும்.

இத்தகைய துன்பங்களை ஓரளவேனும் குறைக்க மக்கள் எல்லோரும் ஒன்று கூடி அல்லது ஒரே நேரத்தில் எங்கிருந்தாலும் பிரார்த்தனை செய்ய வேண்டும். காலை 6 மணி அதற்கு பொருத்தமான நேரம். ★

## திருவுருவப்படம் திறந்துவைப்பு

கப்டன் சத்தியாவின் திருவுருவப்படம் உடுப்பிட்டி இமையாணனில் இன்று ஞாயிறு மாலை 3 00 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டம் வழங்கி கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

அல்வாய் வேவிலந்தையம்பதி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயகும்பாபிஷேகபிரதிஷ்டா குரு சிவஸ்ரீ பால வைத்திய நாதசிவாச்சாரியாருக்கு அண்மையில் கும்பாபிஷேக தினத்தில் 'சிவாகம கிரியா சூடாமணி' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (ஐ 14)

★ ★ ★

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தில் 'ஸ்ரீசிவமகாபுராணம்' உற்சவகாலப் பெருரை நிகழ்த்திய செ. சத்தியமூர்த்திக்கு 'தமிழ் மொழி நாவலன்' பட்டம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ஐ-14)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் இணைந்த கழகங்களுக்கு இடையில் — லீக் முறையில் — யாழ் நாவாந்துறை சென் நிக்கிலஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.00 மணி:- சென். அன்ரனீஸ் எதிர் எவரெஸ்ட்

★ 4.00 மணி:- கொய்யாத்தோட்டம் எதிர் சென். மைக்கல்

★ 5.00 மணி:- சென். நிக்கிலஸ் எதிர் ஆனைக்கோட்டை யூனியன்.

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியின் இரண்டு ஆட்டங்கள் இன்று மாலை 4 மணி முதல் நடைபெறும்.

★ ★ ★

ஸ்ரீகணேச சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவு மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஐந்து ஆட்டங்கள் இன்று காலை 8 மணி முதல் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்,

★ ★ ★

யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின சமாசம் நடத்தும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான — ஆறு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி, இறுதியாட்டங்கள் இன்று காலை 9.00 மணி முதல் யாழ். புனித மரியாள் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

குருநகர் ச. ச. நிலைய அணியை எதிர்த்து சரஸ்வதி ச. ச. நிலையமும்—

திருவள்ளுவர் ச. ச. நிலைய அணியை எதிர்த்து ஐயனார் ச. ச. நிலைய அணியும் மோதும்.

இறுதியாட்டம் நாளை பிற்சகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

காங்கேசன்துறை யங்றோயல் விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முக்கிய இரு ஆட்டங்கள் இன்று மாலை 4.00 மணி முதல் நடைபெறவிருக்கின்றன.

★ ★ ★

டொனால்ட் கணேஷகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டம் ஒன்றில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இன்று காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் ஆரம்பமாகும்.

## நேற்று நடந்த எழுதுவினைஞர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 18

எழுதுவினைஞர் சேவைக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்காக நேற்றுநடைபெற்ற போட்டிப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் 50 பரீட்சை நிலையங்களில் 7 ஆயிரத்து 500பேர்பரீட்சைக்குத் தோற்றினர்.

நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமான இப்பரீட்சைக்கு மொழித்திறன்' உளச்சார்பு கணக்குப்பதிவு ஆகிய மூன்று விடயங்களில் வினாத் தாள்கள் வழங்கப்பட்டன. (ஐ-4)

## புலிகளின் குரல் வானொலியில்

18 — 06 — 1995

ஞாயிறு இரவு

★ 8-02 — இசையரங்கம்— திரு. எஸ். பத்மலிங்கம் பாடுவார்

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — தொடர் நாடகம்— கருணைரவி எழுதும் ''கா ணி நிலம் வேண்டும் — ''அங்கம்—14

19 — 06 — 1995

திங்கள் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்

★ 7-15 — நீங்கள் கேட்டவை

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7-45 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

18 — 06 — 1995

ஞாயிறு மாலை

★ 5-01 — சிந்தனைச்சிதறல்

★ 5-02 — எழுச்சிகீதம்

★ 5-10 — புதியவை

★ 5-15 — மழலைக்களுக்காக

★ 5-30 — கதம்பம்

★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்

★ 6-02 — உங்கள் தெரிவு

## இணுவில் கந்தசாமி கோயில் மாம்பழத் திருவிழா

காலம்: இன்று (18 — 06 — 95)

ஞாயிற்றுக்கிழமை

பி. ப. 2 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:

அவ்வேளை விஷேட மேளக்கச்சேரிகள் இடம்பெறும். அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்!

– திருவிழாக்காரர்.

[37129]

## இலங்கை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புறமும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதை ஒப்புக் கொண்டு, அதனடிப்படையில் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும்.

நிலத்திலும், கரையோரக் கடல் வழியிலும் புலிகள் போர்த் தாக்குதல் நடத்தியதை வைத்துப் பார்த்தால், புலிகளின் கரங்கள் இலங்கையின் பெரும்பாலான பகுதி வரை எட்டுகின்றது. இதை இலங்கை அரசு உணர வேண்டும்.

இப்போது கூட, காலம் தாழ்ந்து விட்டதோ என்று தோன்றுகிறது.

இலங்கை இராணுவத்தை வெற்றிகரமாக சமாளித்திருக்கிறோம்; இந்திய அமைதிப் படைக்கு பாடம் புகட்டி இருக்கிறோம்; அமெரிக்க உதவியை சந்திரிகா நாடினால் அந்தப் படையை சந்திக்க புலிகளுக்கு திராணி உண்டு — எனக்கூறி விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் இலங்கை அரசையும், உலகையும் எச்சரித்தார்.

எனவே, பின்வருமாறு நியாயமாக முடிவு செய்யலாம்.

(அ) புலிகள் வலுவான நிலையிலிருந்து பேசுகிறார்கள்.

(ஆ) சந்திரிகாவின் சமாதான சமிக்ஞை பயனற்றுப் போனது; அவர் இனி இராணுவத்தினரதும், புத்தமதத் தலைவர்கள், சிங்கள மக்கள் ஆகியோரதும் கருத்துக்களை ஏற்று, புலிகளுக்கு உறுதியான பதில் தர வேண்டும். அதுதான் தற்போது நடக்கிறது.

சந்திரிகா இன்னொரு அரசியல் பாதையையும் பின்பற்றுகிறார்.

1985 – 89 இல் இலங்கை இந்திய அரசுகள் செய்தது போல் அரசியல் தீர்வு பற்றிப் பேச ஏனைய தமிழ்க் குழுக்களையும் அழைப்பது தான் அது.

இது நடைமுறை சாத்தியமற்ற விடயம்.

காரணம், யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் வாழும் தமிழர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பை போற்றுகின்றார்கள். தமிழர்களுக்கு விடுதலைப் புலிகளிடம் ஒரு பிடிப்பு உண்டு.

சிங்களவர் தமிழர் அனைவரினதும் பிரமாண்டமான பொதுமக்கள் கருத்து உருவாகி, வன்முறைக்கும், இராணுவத் தீர்வுக்கும் வக்காலத்து வாங்குபவர்களை ஓரங்கட்டினால்தான், அரசியல் தீர்வு என்பது சாத்தியமாகும்.

இதற்கு சற்று பிரயாசை தேவை.

இது சந்திரிகாவுக்கு பெரிய சவாலாக உள்ளது.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச-5)

## திருமறை கலாமன்ற நிகழ்ச்சிகள்

குருநகர், ஜூன் 18

யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்திவரும் நாடக அரங்கியற் கண்காட்சியின் நான்காம் இறுதிநாள் நிகழ்ச்சிகள், இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. என். சுந்தரலிங்கம் தலைமையில் ''ஈழத்துநாடகம்'' ''நேற்று - இன்று - நாளை'' என்னும் பொருளில் கருத்தரங்கு நடைபெறும்.

மாலை 6.45 மணிக்கு பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் ஆரம்பமாகும் கலையரங்கில் குழந்தை ம. சண்முகலிங்கம் எழுதிய ''எதிர் கொள்ளக்காத்திருத்தல்'' என்னும் நூல் வெளியீடும், ''கலையாத கோலங்கள்,'' ''தீசுமந்தோர்'' நாடகங்களும், செ. மெட்றாஸ்மெயில் குழுவினர் கலந்து கொள்ளும் ஒயிலாட்டமும் இடம் பெறும்.

[இ-51]

## சமாதான...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லுக்கு முற்றுப்புள்ளி வைத்து சமாதான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இலங்கை வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஜேர்மனிக்கு சென்றிருந்த போது இந்த சந்திப்பு இடம் பெற்றது. (இ-4)

## முன்னேற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் ஒரு மணி நேரம் விடுதலைப் புலிகள் நடத்திய திரமிகு தாக்குதலை அடுத்து இராணுவத்தினர் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கி ஓடிவிட்டனர்

சேதவிவரங்கள் குறித்த சரியான தகவல்கள் இது வரை கிடைக்கவில்லை.

(இ-4)

## கொக்கட்டிச்சோலை தாக்குதலில் சிப்பாய் பலி!

கொழும்பு, ஜூன் 18

கொக்கட்டிச்சோலையில் இருந்து காஞ்சிரங்குடா நோக்கி ரோந்து சென்ற விசேட அதிரடிப் படையினர் மீது கடந்த வியாழனன்று காலை விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்ட சிப்பாயின் சடலம் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டது. காயமடைந்தவர்களும் சிகிச்சைக்காக அங்கு கொண்டு செல்லப்பட்டனர். (ஐ)

## பிரபா பற்றிய முடிவு இன்னும் 2 வாரங்களிலாம்

கொழும்பு, ஜூன் 18

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவிடம் கையளிப்பது தொடர்பான சட்டபூர்வமான வாய்ப்புக்கள் பற்றிய முடிவு இன்னும் இரு வாரங்களுக்குள் சட்டமா அதிபரினால் அரசாங்கத்துக்குத் தெரிவிக்கப்படுமாம்,

பிரபாவைக் கைது செய்து நாடு கடத்துமாறு உத்தியோகபூர்வமான கோரிக்கை கடந்த 3 ஆம் திகதி இந்திய அரசினால் இலங்கை அரசுக்கு விடுக்கப்பட்டது.

இக்கோரிக்கையுடன் ராஜீவ் காந்தி படுகொலை வழக்குத் தொடர்பான ஆவணங்களும் —

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய விளக்கங்களும் — இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனஎன்று 'திவயின' பத்திரிகை தெரிவிக்கிறது. (இ)

## சீருடை துணிகள்

வலிகாமம் தெற்கு, ஜூன் 18

பாடசாலை மாணவர்களுக்கு இவ்வருடம் வழங்கப்பட்ட இலவச மாணவர் சீருடைகளில் வழங்கப்பட்டவை போக, எஞ்சியிருக்கும் சீருடைத் துணிகளை உடனடியாக கோட்டக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கும் படி உடுவில் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. க. இரத்தினராசா பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

திருப்பி ஒப்படைக்கப்படும் சீருடைத் துணிகள் கட்புல செவிப்புலனிழந்தோருக்கு வழங்கப்பட இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

## வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

உ

### மஹோற்சவ விஞ்ஞாபனம்

1995

| | |
|---|---|
| 18-06-95 | இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றம் பகல் 10.00 மணி |
| 27-06-95 | வசந்தோற்சவம்[தொட்டித்திருவிழா] |
| 08-07-95 | கைலாசவாகனம் |
| 10-07-95 | சப்பறம் |
| 11-07-95 | இரதோற்சவம் |
| 12-07-95 | தீர்த்தம் |
| 18-07-95 | வைரவர்சாந்தி |

08-07-95 இரவு

புதிய தேர் வெள்ளோட்டம்

18-6-95 முதல் - 18-7-95 வரை தினமும் மாலை 7-15 தொடக்கம் 8-15 மணி வரையும் ''பக்திக் கதம்பம்'' ஆத்மீகப் பேருரைகள். வழங்குபவர் பிரமஸ்ரீ காரை கு. சிவராஜ சர்மா அவர்கள்.

தேவஸ்தான பரிபாலன சபை

(சி/1517)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நடராசா அன்னம்மா

பண்ணாகத்தைச் சேர்ந்த திருமதி நடராசா அன்னம்மா 17 - 06 - 95 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை நடராசாவின் அன்பு மனைவியுமாவார்.

அன்னார் திருமதி இராமமூர்த்தி சறோஜினிதேவி [சிங்கப்பூர்], சோமாஸ்கந்தராசா [கேமா ஸ்ரோர்ஸ்], சற்குருதேசிகர் [டென்மார்க்], ஸ்ரீகாந்தன் [ஜேர்மன்], நந்தகுமார் [ஜேர்மன்], திருமதி கெங்கேஸ்வரன் மோகனாம்பிகை, கௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஆ. இராமமூர்த்தி [சிங்கப்பூர்], அன்பரசி, சரோசாதேவி, [டென்மார்க்], சாந்தினி [ஜேர்மன்] சிவரஞ்சனி [ஜேர்மன்], கெங்கேஸ்வரன் [ஜேர்மன்] ஆகியோரின் அன்பு மாமியாரும், தியாகராசா, சிவப்பிரகாசம், காலஞ்சென்ற இராசம்மா [மலேசியா] ஆகியோரின் சகோதரியும், தங்கமலர், சரவணபவான் [சிங்கப்பூர்], கேமலதா, மிர்தா, ரேகா, கவிதா, மகிந்தா [டென்மார்க்] கஸ்தூரி, மயூரி, நிரோஜன் [ஜேர்மன்] ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று 18 – 06 – 95 ஞாயிறு 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை திருவடிநிலை மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:

ந. சோமாஸ்கந்தராசா

[கேமா ஸ்ரோர்ஸ்]

[மகன்]

பண்ணாகம்,

சுழிபுரம். [37132]

### வேலுப்பிள்ளை பரமசிவம்

கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை பரமசிவம் (அரசினர் மரக் கூட்டுத்தாபனம், திருகோணமலை) கடந்த 16 - 06 – 95 இல் திருகோணமலையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, அன்னபூரணம் ஆகியோரின் மூத்த புதல்வனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

வே. சோதிநாதன்.

20, கச்சேரி நல்லூர் வீதி,

கண்டுக்குளி, யாழ்ப்பாணம். [37124]

### திருமதி சிவபாக்கியவதி தனபாலசிங்கம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், தற்போது ஆஸ்திரேலியாவில் வசித்து வந்தவருமான திருமதி சிவபாக்கியவதி [ஆச்சி] தனபாலசிங்கம் 23 05.95 இல் ஆஸ்திரேலியாவில் காலமானார்

இவர் காலஞ்சென்ற பிரபல வழக்கறிஞரும், பிரசித்த நொத்தாரிசுமான ஆசைப்பிள்ளை தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இராஜேஸ்வரன், பிரகதீஸ்வரன், முருகதன், பிரதாபன் [பாபு] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.05.95 ஆஸ்திரேலியாவில் நடைபெற்றன. தயவுசெய்து இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

வி. சோமநாதன்

[பெறாமகன்]

உரும்பிராய் வடக்கு,

உரும்பிராய்.

T. BRAGATHEESWARAN
56, Norrie Avenue,
Clovelly park, SA 5042,
Adelade South,
Australia. [37131]

## புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழைச் சேனை —வாகரை வீதியில் அமைந்திருந்த காயங்கேணி இராணுவமுகாம் —

மண்முனை தென்மேற்கு பட்டிப்பளையில் இருந்த மாவடி ஓடை, புளுகுநாவி ஆகிய படை முகாம்கள் என்பன அண்மையில் மூடப்பட்டன.

மேலும் சில முகாம்கள் அருகில் உள்ள பெரிய முகாம்களுடன் இணைக்கப் பட்டுள்ளன.

திக்குத் திக்காக அமைந்துள்ள சிறிய முகாம்களை ஒன்று சேர்த்து பெரிய முகாம்களை அமைக்க வேண்டிய நிலை கிழக்கில் தற்போது ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. [ஐ)

## சூடாநாட்டுக்கான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னர்.

மத்திய பரிவர்த்தனை நிலையத்துக்கு வந்து சோதனைகளைமேற்கொள்ளுமாறு தபால் திணைக்களம் கேட்டுள்ளது.

ஆனால் படையினரோ துறைமுகத்திலுள் வைத்தே கடிதங்களை பரிசோதிக்க வேண்டும் என்று அடம்பிடிக்கின்றனர்.

— இவ்வாறு அந்த அதிகாரி விளக்கமளித்ததாக அரசசார்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (ஐ)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி இரங்கநாதன் பரமேஸ்வரி

மலர்வு: 17 - 06 - 1951

உதிர்வு: 18 - 05 - 1995

அன்பான என் துணையே!
அழியாது உந்தன் நினைவு
ஒழியாது என்றும் நெஞ்சைவிட்டு
வழியேதும் உண்டோ கூறு - உனை
வரவழைக்க மீண்டும் இப்புவியில்
அன்பான அன்னையே!
அரவணைப்பு இன்றி நாம் - இங்கு
ஆற்றிட முடியாத
ஆறாத் துயர் தனிலே
ஆண்டுகள் பல கடந்திடினும்
இழந்த எம் நெஞ்சங்கள்
இழந்ததே நிம்மதி

கணவன், பிள்ளைகள்,

சகோதரன் தியாகராஜா

வளாக வீதி,

திருநெல்வேலி. (37130)

## திருமண அறிமுகம்

கணபதி துணை

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ வருடம் வைகாசி மாதம் 21 ஆம் நாள் (04 – 06 – 95) ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணிமுதல் 8-00 மணி வரையுள்ள சுக்கில பட்சமும் சஷ்டித்திதி மகா நட்சத்திரமும் வியாகாத யோகமும் கௌலவ காணமும் கூடிய துலா இலக்கின சுப போக சுப தினத்தில்,

எங்கள் புத்திரன் திருநிறை செல்வன் **நந்தகுமாரன்** அவர்களுக்கும்

எங்கள் புத்திரி திருநிறை செல்வி **ராஜீவி** அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு திருமணம் பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன் நேரிலே திருமண மண்டபத்தில் இனிது நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி சின்னத்துரை குடும்பத்தினர். பூம்புகார், [illegible]

திரு. திருமதி தங்கராஜா குடும்பத்தினர். [illegible]னாலை.

(8440)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18 – 06 1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org